ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) - 2024

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஐ மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க கடன் உடன்படிக்கை 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய 3325 - எஸ்ஆர்ஐ மற்றும் 3326 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை ஆகியவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து,நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 906 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 800 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 13,780 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நன்கொடையாளர் ஐ.அ.டொலர் 800 மில்லியனில் ஐ.அ.டொலர் 557 மில்லியனை நான்கு தவணைகளாக அவர்களின் வழக்கமான வழங்கல் முறையின்படி விடுவித்திருந்ததுடன் பொருளாதார நெருக்கடியின் விளைவாக செயலாக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் முடிக்கப்படாத வீதிப் பிரிவின் முக்கியமான பணிகளை மேற்கொள்வதற்கும், ஐ - வீதி மற்றும் இரண்டாம் ஐ - வீதி நிகழ்ச்சித்திட்டங்களில் செய்யப்பட்ட முந்தைய பணிகளுக்கான கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது பகுதியின் கீழ் மேலும் ஐ.அ.டொலர் 60 மில்லியனை வழங்க முடிவு செய்யப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து நிகழ்ச்சித்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்கீட்டுக் குறைபாடுகள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 07 இன் படி, கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் அவை தொடர்புடைய காலத்தின் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய ரூபா.31.62 மில்லியன் மதிப்புள்ள 02 இடைக்கால கட்டணச் சான்றிதழ்களின் பெறுமதிகளுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயன் முன்னேற்றத்தில் அதே அளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	31.62	2025 ஆம் ஆண்டு கணக்குகளில் செலுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 27 இன் படி, நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதி நிலைமை நியாயமாக முன்வைக்கப்பட வேண்டும். இருப்பினும், நடப்பு பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 282.16 மில்லியன் பிடித்துவைத்தல் சிவில் வேலை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையிலும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயன் முன்னேற்றத்தில் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	282.16	பிடித்துவைத்தலானது சிவில் வேலை ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தவேண்டிய ஏற்பாடாக தவறுதலாக பதியப்பட்டதுடன் இது JE/25/33 ஆம் இலக்க நாட்குறிப்பினூடாக திருத்தப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.

(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 27 இன் படி, நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதி நிலைமை நியாயமாக முன்வைக்கப்பட வேண்டும். இருப்பினும், வசூலிக்கப்படாத ஆரம்ப முற்பணமாக ரூபா. 2,083.87 மில்லியன் தொகையும் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.	2,083.87	முந்தைய ஆண்டின் கணக்காய்வு அவதானிப்புகளின்படி, நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் நிலுவையில் உள்ள ஆரம்ப முற்பணத்தில் ஐய வசூல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 27 இன் படி, நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதி நிலைமை நியாயமாக முன்வைக்கப்பட வேண்டும். இருப்பினும், நடப்பு பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூ.122.36 மில்லியன் பெறுமதியான கிரயக் கோரிக்கைகளும் செலுத்த வேண்டிய தாமத வட்டியாகக் கணக்கிடப்பட்டுள்ளன. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயன்முன்னேற்றத்தில் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	122.36	சிவில் பணி ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ஏற்பாடாக தவறுதலாக பதியப்பட்ட ரூபா.122.36 மில்லியன் JE/25/34 ஆம் இலக்க நாட்குறிப்பினூடாக திருத்தப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பந்தி 22(அ) இன் படி, இந்த ஏற்பாடு தற்போதைய கடப்பாட்டுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், கிரயக் கோரிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா.1,129.93 மில்லியன் ஏற்பாடொன்று பொறியியளாலரால் நிராகரிக்கப்பட்டது. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயன்முன்னேற்றத்தில் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	1,129.93	சிவில் பணி ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ஏற்பாடாக தவறுதலாக பதியப்பட்ட பொறியாளரால் நிராகரிக்கப்பட்ட செலவு கோரிக்கைகள் JE/25/35 ஆம் இலக்க நாட்குறிப்பினூடாக திருத்தப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.

(ஊ)	நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் செயன்முன்னேற்றப் பணி இருப்பு ரூபா.26,767.80 மில்லியனாகவும், நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின்படி, அது ரூபா.28,776.60 மில்லியனாகவும் இருந்தது. எனவே, இரண்டு மீதிகளுக்கும் இடையே ரூபா.2008.80 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.	2,008.80	நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களிலுள்ள ரூபா. 2,008.80 மில்லியன் சிவில் வேலைகள் பணிச் செயன்முன்னேற்றத்தின் கீழ் பதியப்பட்டது.	நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்பு கணக்காளர் நிதிக்கூற்றுக்களின் உண்மைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.
(எ)	தற்போதுள்ள கடப்பாட்டின் உறுதியை உறுதிப்படுத்தாமல், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றில் ரூபா. 3,176.89 மில்லியன் மதிப்புள்ள DAB கூறுகள் மற்றும் நடுவர் கோரிக்கைகளுக்கான ஏற்பாடு காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, செயன்முன்னேற்றத்தில் அதே அளவு அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	3,176.89	DAB இன் விபரங்கள் மற்றும் நடுவர் கோரிக்கைகள் இரண்டு கிழமைக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும்	நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்பு கணக்காளர் நிதிக்கூற்றுக்களின் உண்மைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.
(ஏ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 05 இன் பந்தி 43(அ) இன் படி, ஒவ்வொரு நிதி நிலை அறிக்கைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிதி நிலைமை அறிக்கையின் திகதியிலுள்ள இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இருப்பினும், மேற்கண்ட தேவைக்கேற்ப நிதி நிலைமைக் கூற்றில் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய சமநிலை சரிசெய்தலை கணக்கிட்டு சரிசெய்யவோ அல்லது வெளிப்படுத்தவோ இல்லை.	-	அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, செயற்திட்ட நிதிநிலைமைக் கூற்றுக்களில் சமநிலை மாறுபாட்டை சரிசெய்வது அவசியமில்லை	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுங்கள்.

2.2 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2020 பெப்ரவரி 28 ஆம்	மாகாண அறிக்கைகளுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டத்தால்	பொருள் கணக்கெடுப்பு சபை	சுற்றறிக்கைக்கிணங்க பொருள்

	திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை.	நடாத்தப்பட்ட பொருள் கணக்கெடுப்பு சபை தொடர்பான அறிக்கையை அடுத்த ஆண்டு யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், மீளாய்வண்டிற்கான தொடர்புடைய அறிக்கை 2025.07.09 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.	பூர்த்திசெய்யப்பட்டதுடன் அறிக்கை 2025.06.27 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும்.	கணக்கெடுப்பு சபை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(i)(உ) ஆம் பிரிவு	பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் கணக்காய்வாளர் அதிபதியால் கோரப்பட்ட குறிப்பிட்ட நேரத்திற்குள் பதிலளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் ஆயினும், 2025 மார்ச் 27 மற்றும் 2024 திசெம்பர் 12 ஆம் திகதிகளில் 82 முதல் 166 நாட்கள் வரை தாமதத்துடன் வழங்கப்பட்ட ஐயவினாக்களுக்களுக்கான பதில்கள் வழங்கப்பட்டன.	வீதி புனரமைப்பு மற்றும் முன்னேற்ற ஒட்டுமொத்த வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதுடன் மாகாண ஐ வீதி அலுவலகங்கள் மூடப்பட்டன, மேலும் பெரும்பாலான பொறியியல் ஊழியர்களும் ஆர்டீஏவிலிருந்து ராஜினாமா செய்தனர். அதனால், 2025.06.20 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் எண். MOH/HWY/ACC18/2022/13(v-i) மூலம் 2025.07.09 வரை கால நீட்டிப்பு கோரப்பட்டுள்ளது.	காலதாமதமில்லாமல் அனைத்து ஐய வினாக்களுக்கும் பதில்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டதின் 38 (1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமான தேவைப்பாடுகளைச் சுட்டிக்காட்டி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.
(இ)	2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு	செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எனினும்,மீளாய்வாண்டின் போது ஒரேயொரு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது.	வழிநடாத்தல் குழுவின் இரண்ட கூட்டங்கள் 02.08.2024 மற்றும் 08.11.2024 இல் நடாத்தப்பட்டிருந்தது.	பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க செயற்திட்ட வழிநடாத்தல் கூட்டம் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

(ஈ)	2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை	செயற்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழு நிறுவப்பட வேண்டுமென்பதுடன் ஆண்டுதோறும் குறைந்தது 04 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிலிருந்து ஒரே ஒரு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது.	முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் 04.03.2024 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ரத்து செய்யப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு முறையாகச் செய்யப்படவில்லை.	பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க செயற்திட்ட உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

(அ) **வீதி நீளம்**

கூறு	**செயற்பாடு**	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**		**கணக்காய்வு விடயம்**	**தாமதங்களிற்கான காரணங்கள்**
		எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**		
		கிமீ	**கிமீ**		
தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல்.	தேசிய மற்றும் கிராமிய வீதிகள்	400 km 3100 km	178.19 km 2870 km	நிகழ்ச்சித்திட்டமானது 178.19 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 2,870 கிமீ கிராமிய வீதிகளில் முறையே 45 சதவீதம் மற்றும் 93 சதவீதத்தை மாத்திரமே மாத்திரமே 10 ஆண்டுகள் கடந்த பின்னர் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்துள்ளது. வசதி நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் ரூபா 1,950 மில்லியன் செயற்திட்ட முகாமைத்துவ செலவீனமாக ஒதுக்கப்பட்டிருந்த போதும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டம் ரூபா 2,501.80 மில்லியனை	ஒப்பந்தகாரர்களில் பலர் அவர்களுடைய வேலையை நிறுத்தியமை ஓப்பந்தகாரின் மந்தமான செயற்பாடு ஓப்பந்த கொடுப்பனவுகளில் ஏற்பட்ட காலதாமதம் மந்தமான செயற்பாட்டின் பிரதான பங்களித்திருந்தது.

மாத்திரம் பயன்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

முகாமைத்துவத்தின் பதில் ஒதுக்கப்பட்ட 1,950 மில்லியனை விட அதிகமான நிதியை ஏடீபீ வழங்கியது. இருப்பினும், வெளிவாரி வளங்கள் திணைக்களத்திற்கு (ERD) ஒரு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளரின் பரிந்துரை செயற்திட்டம் முறையான செயல் நடவடிக்கைத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் மற்றும் பாதீட்டையும் அதற்கேற்ப பொறுப்புகளையும் நிர்ணயிக்க வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இன் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வில் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட வேண்டும்.

(ஆ) வீதிகளின் எண்ணிக்கை

கூறு	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		கணக்காய்வு விடயம்	தாமதங்களிற்கான காரணங்கள்
		எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் எண்ணிக்கை	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்எண்ணிக்கை**		
கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல்.	வீதி புனரமைப்பு	735	604	604 கிராமிய வீதிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்ததுடன் 14 கிராமிய வீதிகள் இரண்டாவது ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியமான பணித் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்டதுடன் அவை முழு நிகழ்ச்சித்திட்டக் காலத்திலும் செயற்திட்டத்தால் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. பொதுச் செலவு மறுஆய்வுக் குழுவின் பரிந்துரையின்படி, மறுசீரமைப்புக்குப் பிறகு செல்லக்கூடிய நிலைக்கு வீதியை ஒப்படைப்பதன் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு வழங்காததால் சரிபார்க்க முடியவில்லை.	ஒப்பந்தகாரர்களில் பலர் அவர்களுடைய வேலையை நிறுத்தியமை ஒப்பந்தகாரின் மந்தமான செயற்பாடு ஒப்பந்த கொடுப்பனவுகளில் ஏற்பட்ட காலதாமதம் மந்தமான செயற்பாட்டின் பிரதான பங்களித்திருந்தது.

முகாமைத்துவத்தின் பதில் இரண்டு வாரங்களுக்குள் விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும்.

கணக்காய்வாளரின் பரிந்துரை குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்காதது குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு விடயங்கள்		முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 4,192.92 மில்லியன் ஆரம்ப முற்பணங்கள் ஒப்பந்தகாரரகளுக்குரிய கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டமை கடினமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பின் மீதி வேலைகள் நோக்கெல்லை இன்மையால் நிச்சயமற்றதாகவிருந்தது.	முற்பணங்களை அறவிடுவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல கலந்துரையாடல்களை பீஎம்யூ மேற்கொண்டிருந்தது.	முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும்.
(ஆ)	இந்த நிகழ்ச்சித்திட்டம் 53 ஒப்பந்த பொதிகளின் கீழ் கிராமிய வீதிகள் மற்றும் தேசிய வீதிகளை மறுசீரமைக்க திட்டமிட்டுள்ளதுடன் இந்த பொதிகளில், பல்வேறு காரணங்களால் 11 பொதிகளில் மூல தொடர்புத் தொகை அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், அந்த ஒப்பந்த தொகுப்புகளின் ஒப்பந்தத் பொதிகளில் திரட்டப்பட்ட அதிகரிப்பு ரூபா.2,071.51 மில்லியன் ஆகும். விலை மாறுபாடுகளில் திறமையற்ற ஒப்பந்த முகாமைத்துவத்தின் விளைவு ஒப்பந்தத் தொகையில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு மற்றும் நீட்டிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டக் காலத்திலும் முக்கியமாகப் பாதிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது.	செயற்திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டிற்கான அனுமதியை தயாரித்து பெற வேண்டும். கூடுதல் செலவைத் தவிர்க்க ஒப்பந்தத்தை சரியான நேரத்தில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 வாகனப்பயன்பாடு

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
நிகழ்ச்சித்திட்டமானது 167 மோட்டார் வாகனங்கள் மற்றும் 168 மோட்டார் சைக்கிள்களை ரூபா 1,499.58 மில்லியன் கிரயத்தில் 2015 – 2017 காலப்பகுதியின் போது கொள்வனவு செய்ததுடன் அத்தகைய வாகனங்களில் 156 மோட்டார் வாகனங்கள் மற்றும் 166 மோட்டார் சைக்கிள்களை வீதி புனரமைப்பு வேலைகள் முடிவடைவதற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2024 சனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட தேசிய 1/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 4.4 இன் படி, பீஎம்யூ மற்றும் மாகாண அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 09 வாகனங்களை முறையாகப் பெறாமல் இந்த நிகழ்ச்சித்திட்டம் வாடகைக்கு எடுக்க	ஆர்டீஏ வாகனங்கள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டதால், பகுதி 4 இலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஆர்எம்சீ மற்றும் மறு ஏலம் விடப்பட்ட ஒப்பந்த பொதிகளில் மேற்கொள்ளப்பட்ட வீதி மறுசீரமைப்பு பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டில் பதினான்கு (14) வாகனங்கள் உரிய பெறுகை நடைமுறையைப் பின்பற்றி, 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு முன்பு வாடகைக்கு எடுக்கப்பட்டன.	சொத்துக்களை தவறாக நிர்வகித்ததற்கும் தவறாகப் பயன்படுத்துவதற்கும் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

வேண்டியிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அன்று வாகன வாடகையாக ரூபா.9.82 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2024 திசம்பர் 31 வரை செயற்திட்டத்தால் ரூபா.89.06 மில்லியன் திரட்டப்பட்ட வாகன வாடகைக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.	பெறுகைச் செயல்முறை 2023 ஆம் ஆண்டிற்காக ஆர்டீஏ இல் பதிவுசெய்யப்பட்ட வாகன வழங்குனர்களை அடிப்படையாகக் கொண்டது.

3.4 செயற்திட்ட நோக்கங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	ரூபா 248.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.45 மில்லியன் தொகையான திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்படாத கடன் பெறுவனவுகளில் கடன் வழங்கும் முகவராண்மைக்கு சிக்கனமற்ற முறையில் நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பகுதிகளைப் பயன்படுத்துவதன் மூலம், கடப்பாட்டுக் கட்டணத்தைக் குறைக்க முடியும்.	நிகழ்ச்சித்திட்டம் சரியான செயல்நடவடிக்கைத் திட்டத்தை மற்றும் பாதீட்டை தயாரிக்க வேண்டுமென்பதுடன் கடப்பாட்டுக் கட்டணங்களைக் குறைக்க அதற்கேற்ப பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஒப்பந்த நிபந்தனைகளின் உட்பிரிவு 108.4 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற போதிலும் 23 ஒப்பந்தப் பொதிகளுடன் தொடர்புடைய ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 397.77 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதனால் சாதகமான ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தலாம்.	ஆர்டிஏ ஆனது தற்போது போதியளவு ஆய்வுகூட உபகரணங்களையும் அத்தகைய உபகரணங்களுக்கான போதியளவு களஞ்சியத்தையும் கொண்டிருக்கவில்லை.	ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை ஒழுங்கான முறையின் அமுல்படுத்த முன்னர் மீளாய்வு செய்யப்படவேண்டும்.

3.5 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக வீதி புனரமைப்பு நிறுத்தப்பட்டது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட மற்றும் முழுமையடையாத வீதிப் பிரிவுகளின்	நிதி வரையறைகள் காரணமாக பெரும்பாலான ஒப்பந்தங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. ஒப்பந்ததாரர்களின் அனுமதியுடன்	பிணைமுறிகளைப் பணமாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட

முக்கியமான பணிகளை மேற்கொள்வதற்கும், ஐ வீதி மற்றும் இரண்டாம் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முந்தைய பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவதற்கும், 2023 ஒக்தோபர் 09 ஆம் திகதியிட்ட அமைச்சரவை எண். 23/1830/608/070-II இன் அனுமதியின் கீழ், இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டத்தின் 4வது பிரிவின் கீழ் மேலும் ஐ.அ.டொலர் 60 மில்லியனை வழங்க முடிவு செய்யப்பட்டது. பகுதி 4 இன் கீழ் பெறப்பட்ட நிதியில், 2024 திசெம்பர் 31 நிலவரப்படி, சிவில்ப் பணிகள் மற்றும் ஆலோசனைக்காக ரூபா. 4,594.82 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தொடங்கப்பட்ட மேற்கண்ட முக்கியமான பணித் திட்டத்தின் கீழ், முழுமையடையாத வீதிகளில் 20 கிராமிய வீதிகள் மற்றும் 18 தேசிய வீதிகளின் மறுசீரமைப்பு பணிகள் மட்டுமே முக்கியமான பணித் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. ஆரம்ப முற்பணம் ரூபா. 4,192.93 மில்லியன் முழுமையடையாத வீதிகள் தொடர்பாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையில் இருந்ததால், அந்த நிலுவையில் உள்ள நிலுவைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு பயனுள்ள திட்டம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.	நிலுவையில் உள்ள ஐபிசிக்கள், பிடித்துவைத்தல் பணம் போன்றவற்றை செலுத்துவதன் மூலம் முற்பணங்களை மீட்டெடுப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்குவதற்காக பிஎம்யூ ஒப்பந்ததாரர்களுடன் பலமுறை கலந்துரையாடல்களை நடாத்தியது.	வேண்டுமென்பதுடன் முறையான விசாரணை நடத்தப்பட்டு இழப்பை மீட்டெடுக்க வேண்டும்.

3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	நிகழ்ச்சிதிட்டத்தின் பிரிவுகளில் இயற்பியல் மற்றும் தொடர்புடைய முகாமைத்துவப் பணிகளை ஆதரிப்பதற்காக வலை அடிப்படையிலான தகவல் போர்ட்டலை நிறுவுவதற்காக, இந்த நிகழ்ச்சித்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஒரு வலை அடிப்படையிலான GIS தகவல் அமைப்பை வாங்கியது. நிதிக்கூற்றுக்களின் படி ஏற்பட்ட மொத்த செலவு ரூபா. 13.31 மில்லியன் ஆகும். மேற்கண்ட ஆரம்ப செலவுக்கு கூடுதலாக, 2017 முதல் 2022 ஒக்தோபர் வரை 6 ஆண்டுகளுக்கு வருடாந்திர மென்பொருள் பராமரிப்பு கட்டணமாக நிகழ்ச்சித்திட்டம் ரூபா. 10.33 மில்லியனை செலுத்தியுள்ளது, எனவே, நிகழ்ச்சித்திட்டத்தால் ஏற்பட்ட ஒட்டுமொத்த செலவு ரூபா. 23.64 மில்லியன் ஆகும். இருப்பினும், இந்த நிகழ்ச்சித்திட்டம் 2022 ஒக்தோபர் 31	ஆர்டீஏவின் திட்டமிடல் பிரிவுக்கு உதவுவதற்காக வலை அடிப்படையிலான GIS தகவல் அமைப்பைப் பயன்படுத்துவதற்கான சேவை ஒப்பந்தத்தை புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய திட்டம் வரையறுக்கப்பட்ட GIS Solution (தனியார்) நிறுவனத்திடமிருந்து 2025 ஏப்ரல் இல் பெறப்பட்டது, மேலும் அது பரிசீலனை நிலையில் உள்ளது.	பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

க்குப் பிறகு சேவை ஒப்பந்தத்தை நீட்டிக்கவில்லை. எனவே, செயற்திட்ட இயக்குநர் முறையான அதிகாரம் மற்றும் மதிப்பீடு இல்லாமல் சேவை ஒப்பந்தத்தை நிறுத்தியதாகக் கருதி கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த அமைப்பை ஆர்டீஏ இன் திட்டத்திற்கும் திட்டமிடல் பிரிவிற்கும் உதவ திட்டமிடப்பட்டிருந்தாலும், சேவை ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதால் அதை அடைய முடியவில்லை. எனவே, ஏற்படும் முழு செலவும் திட்டத்திற்கு பொருளாதாரமற்றதாக இருக்கும் என்று கண்டறியப்பட்டது.

(ஆ) **ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பலாங்கொட – போவத்த – கல்தோட்ட வீதியின் புனரமைப்பு**

2022 ஆம் ஆண்டில் ஆர்எம்சீ 04 ஆம் பொதியின் கீழுள்ள பல்மடுல்ல - எவில்பிற்றிய-னோனாஹம வீதியின் முரண்பாடாக பலாங்கொட – போவத்த – கல்தோட்ட வீதி 2022 இல் மீள்புனரமைக்கப்பட்டது. இந்த வீதியின் 16 கிலோமீற்றர் மொத்த நீளம் பெல்மடுவல-எம்பிலிப்பிற்றிய-னோனாகம வீதியின் புனரமைப்பு வேலைகள் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே 04 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i)	நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் நன்கொடையாளரின் இணக்கத்திற்கு இணங்க மீள்புனரமைப்பு வேலையினை அனுமதித்து பெறுகைச் செயன்முறையை பின்பற்றியிருந்தபோதும் அத்தகைய அனுமதிகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாததுடன் நிர்மாணங்களானது உரிய பெறுகைச் செய்முறையைப் பின்பற்றாமல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	தேசிய வெசாக் பண்டிகைக்கு முன்னர் பணிகளை முடிக்க செயல்முறையை விரைவுபடுத்துமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். எனவே, RMC/ 04 ஒப்பந்ததாரர்களுக்கு வேறுபாட்டு உத்தரவுகளை வழங்குவதன் மூலம் அதை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. எனினும், எதிர்கால ஒப்பந்த/பெறுகை விடயங்களில் அனைத்து பீடீகளின் நடைமுறைக்கு இணங்க கண்டிப்பாக	பெறுகை வழிகாட்டி நிபந்தனைகளுடன் இணங்குதல் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்காமைக்காக உரிய உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ii) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட விவரங்களின்படி, அமைச்சகத்தால் முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு, தொடர்புடைய அறிக்கையை பணிப்பாளர் நாயகத்திற்கு (பொறியியல்) 2023 நவம்பர் 30 அன்று சமர்ப்பித்தார். இருப்பினும் நன்கொடையாளரின் அனுமதியைப் பெறுவதற்கும், தொடர்புடைய ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட கட்டணத்தை முறைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட கூடுதல் நடவடிக்கைகள் குறித்த ஆதாரங்கள் வெளியிடப்படவில்லை.

பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

(இ) நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்குக் கடன் நிதிகள் குறைவாக இருந்ததால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் அந்த ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளுக்கு வட்டி பொறுப்பு எழுந்தது. எனவே, 2024 யூன் 24 அன்று அமைச்சரவைக்கு ஒரு விஞ்ஞாபனம் அனுப்பப்பட்டு, 2024 யூலை 15 அன்று உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா.4,100 மில்லியன் தொகையைப் பயன்படுத்தி அந்த நேரத்தில் ஏற்கனவே பெறப்பட்ட சான்றளிக்கப்பட்ட நிலுவையில் உள்ள ஒப்பந்தக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு அனுமதி பெறப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்பட்ட நிலுவையில் உள்ள இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களின் அட்டவணைகளை விசாரிக்கும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i)	மேற்கூறிய முடிவுக்கு மாறாக, உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி செலுத்த வேண்டிய ஐந்து ஐபிசிக்கள் ரூபா.166.20 மில்லியன் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டில் கடன் நிதிகள் (கடன் எண்.3610) மூலம் இது ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டது.	இந்த ஐபிசி தொகைகள் இடைவெளி நிதி நிலுவையில் உள்ள ஐபிசி அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தாலும், கடன் 3610 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா. 449 மில்லியன் கூடுதல் கடன் நிதியைப் பயன்படுத்தி தொடர்புடைய தொகை செலுத்தப்பட்டது.	செயற்திட்டம் முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமெனபதுடன் பாதீட்டையும் பொறுப்புகளையும் அதற்கேற்ப நிர்ணயிக்க வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இன் விதிகளின்படி மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வில் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட வேண்டும்.
(ii)	ஒப்பந்த பொதி எண்.KL3-R2 இன் IPC எண்.21 இன் படி, பணம் செலுத்துதல் 2023 திசெம்பர் 01 அன்று செய்யப்பட்டிருந்தாலும், உள்நாட்டு நிதியைப் பெறுவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபன அட்டவணையில் அது சேர்க்கப்பட்டுள்ளது.	ஒப்பந்த பொதி எண்.KL3-R2 இன் IPC எண்.21 க்கு பணம் செலுத்தப்படவில்லை. நிலுவையில் உள்ள ஆரம்ப முற்பணத்தை மீட்டெடுப்பதற்கு எதிராக நிலுவைத் தொகை ஈடுசெய்யப்பட்டது.	-மேற்படி-
(iii)	அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அட்டவணைகளிலும், நிதிநிலைமைக் கூற்றின் அட்டவணை எண்.10.3 இலும் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தாமத வட்டியில் ரூபா.49.58 மில்லியன் வேறுபாடுகள் காணப்பட்டன.	எதிர்பார்க்கப்பட்ட பணிக்கான செலுத்தப்பட்ட ஐபிசிக்கள், நிலுவையில் உள்ள ஐபிசிக்கள் மற்றும் ஐபிசிகளின் தொகையின் அடிப்படையில் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான வட்டித் தொகைகள் கணக்கிடப்பட்டன. நிதிநிலைமைக்கூற்றுக்களின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தாமத வட்டித் தொகைகளில் 31.12.2024 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட ஐபிசிகளின் தொகைகள் மற்றும்	-மேற்படி-

		உண்மையான நிலுவையில் உள்ள ஐபிசிகளின் தொகை ஆகியவை அடங்கும்.	
(ஈ)	ஒப்பந்ததாரரின் மெதுவான முன்னேற்றம் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மறுவாழ்வு அளிக்க திட்டமிடப்பட்ட நான்கு ஒப்பந்த பொதிகள் நிறுத்தப்பட்டதடன் அந்த பொதிகள் உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் அதே ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டன. உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டத்தின் மூலம் அந்த ஒப்பந்ததாரரிடமிருந்து நிலுவையில் உள்ள ஆரம்ப முற்பணங்கள் ரூபா.515.59 மில்லியனாகவிருந்தாலும் 2024 திசம்பர் 31 வரை நிகழ்ச்சித்திட்டத்தால் அந்த நிலுவையில் உள்ள முற்பணங்களை மீட்டெடுக்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.	உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுடன் தொடர்புடைய ரூபா. 515.59 நிலுவையில் உள்ள கூட்டு முற்பணம், செயலில் உள்ள முற்பண முறிகளை பணமாக்குவதன் மூலம் வசூலிக்கப்படும்.	பிணைகளை பணமாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதைத் தீர்மானிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், ஒப்பந்ததாரருக்கு எதிரான ஒப்பந்தங்களின் நிபந்தனைகளைப் பின்பற்றாமல் LBF செயற்திட்டத்திற்கு ஒப்பந்தங்களை மாற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையின் இணக்கத்தை அடையாளம் காண விசாரணை நடத்தப்பட வேண்டும்.